# தமிழ்நாடு சட்டப் பேரவை.

## புதன்கிழமை, 1974 ஏப்ரல் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### மானாமதுரை அரசு மருத்துவமனை

* 837 வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் ஆய்வி லுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒரு திட்டம் மக்கள் நல் வாழ்வு குடும்ப நலத்துறை இயக்குனரால் பரிசிலிக்கப்பட்டு வரு கிறது. அரசாங்க கவனத்திற்கு இன்னும் வரவில்லை.

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, இராமனாதபுரம் மாவட்டம் மானாமதுரையில் இருக்கும் அரசாங்க ஆஸ்பத்திரி ஒரு சிறிய குகை போன்ற இடத்தில் இருக்கிறது. மானாமதுரையைச் சுற்றி ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட ஜனங்கள் அந்த ஆஸ்பத்தி ரிக்கு வந்துதான் சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக அரசாங்கம் பெரிய மருத்துவ மனையொன்றை அங்கே கட்டுவதற்கு அந்த இடம் போதுமானதாக இல்லாத காரணத்தால் சித்ரா ஓட்டு கம்பெனிக்கு எதிரே அரசாங்கத்திற்கு சொந்தமாகவுள்ள பத்து ஏக்கரா நிலப் பகுதியில் ஆஸ்பத் திரியைக் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாறு மதுரை மருத்துவ மனையைத் தமிழக அரசு அண்மையில்தான் அரசு மருத்துவ மனையாக ஆக்கியிருக்கிறது. அப்படி ஆக்கப்பட்ட அந்த மருத்துவ மனை மிகச் சிறிய வசதியுடையதாக இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, அதற்குப் பின்னர் புதிய மருத்துவ மனையொன்று கட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கான புறம்போக்கு நிலம் கைக்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த நிலத்தை மருத்துவத் துறையினிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த நிலம் கிடைத்ததற்குப் பின்னர், அதிலே மருத்துவ மனை கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குறைந்தது ஒரு இலட்ச ரூபாயாவது நன்கொடை வசூலிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நன்கொடை வசூலிப்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தீவிரப்படுத்துவார்களானால், அடுத்த ஆண்டிலாவது அதற்கு மருத்துவ மனை கட்ட வாய்ப்பு ஏற்படும்.

### *Non-clinical Professors*

*** 838 Q.—Thiru N. K. PALANISWAMY :** Will the Hon. the Minister for Health be pleased to state the number of non-clinical Professors under stagnation of salary in the Medical Department as on 30th November 1973?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பன்னிரண்டு.

**திரு. என். கே பழனிசாமி :** தலைவர் அவர்களே, மெடிகல் காலேஜில் இருக்கக்கூடிய நான்-கிளினிகல் ப்ரொஃபஸர்களும் எம்.பி.பி.எஸ். படித்திருப்பதால், மற்றவர்களுக்கு என்ன ஸ்கேல் ஆஃப் பே கொடுக்கப்படுகிறதோ அது இவர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ரூபாய் 900—50—1,300 என்று பேராசிரியர்களுக்கு வழங்கப்படுகிற அந்தச் சம்பள விதத்தில் ரூபாய் 1,300 என்ற நிலையை ஓராண்டு, இரண்டாண்டுகளுக்கு முன்னரே இவர்கள் அடைந்திருக்கிறார்கள். ஓர் உயர்ந்த சம்பளத்தில் எல்லைக்கோடு வருகிறது. அதை அடைந்த பிறகு மேலும் சம்பளம் தர இப்பொழுது வாய்ப்பு